# ஜாமக்காரன்
# JAMAKKARAN

ஜாமக்காரன் JAMAKKARAN

**(ஜாமக்காரனில்)** எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதை பிடித்துக்கொள்ளுங்கள். 1 தெச. 5:21

ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான். ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி. 2:15

**VOLUME - 4 Reg NO.TNBIL/2016/70171 ISSUE - 12**

**DECEMBER 2020 TAMIL & MALAYALAM**

**ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=**



Mob.: No. **9894261333** இந்த எண். **SMS** உபயோகத்துக்காக மட்டும்

**0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com**




கர்த்தருக்குள் அன்பானவர்களே !

உங்கள் யாவருக்கும் எங்கள் புதுவருட வாழ்த்துக்கள்

இந்த ஜாமக்காரன் டிசம்பர் மாதத்திற்குரியது. ஆனால் வெகு தாமதமாக 2021 **ஜனவரி** மாதத்தில் இந்த ஜாமக்காரன் உங்கள் கைகளில் கிடைக்கிறது.

**202**ம் வருடம் நாம் யாவரும் அறிந்தபடி **கொரோனா கிருமி** ஏறக்குறைய அனைவரையும் **மரண பயத்தில்** ஆழ்த்தியது. நாட்டில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டது. பெரும்பாலான குடும்பங்களில், **சபைகளில்,** ஊழியங்களில், **ஊழியக்காரர்களில்** பெரும் மாற்றங்கள் உண்டானது. நம் பிள்ளைகளின் **படிப்பு,** வேலை, **திருமணம்** போன்ற பல விஷயங்கள் **பெரும் கேள்விக்குறியானது.** டாக்டர்கள் வியாதியஸ்தரை நேருக்கு நேர் தொட்டு பார்த்து வைத்தியம் செய்ய பயப்பட்டனர்.

வீட்டில் வயதான பெற்றோர், **வயதான தாத்தா** – பாட்டி ஆகிய இவர்களில் பலர் **மரணத்தை விரும்பினார்கள்.** யாவரும் தங்கள் பிள்ளைகள் **வருமானம் இழந்து** அல்லது வருமானம் குறைந்து அரை சம்பளம் பெற்றவர்களையும் கண்டு தங்கள் பிள்ளைகளுக்கு அல்லது பேரப்பிள்ளைகளுக்கு **நாம் பாரமாக** இருக்கிறோமோ என்று பல வயதானவர்கள் கவலைப்பட்டனர். மனம் திரும்பி

**இரட்சிக்கப்பட்ட** விசுவாசிகள், **ஊழியர்கள்கூட** கர்த்தாவே இந்த வியாதிக்கு **வைத்தியம் செய்ய,** அல்லது **மாத்திரை** வாங்கக்கூட பண வசதி இல்லாமல் போனதால் சிலர் **மரிக்க ஆசைப்பட்டனர்.** வசனம் அறிந்த விசுவாசிகளும் ஊழியர்களும்கூட தங்கள் ஜெபங்களில் கர்த்தாவே நாங்கள் மற்றவர்களுக்கு பாரமாக இராதபடி இருக்க **எங்களை எடுத்துக்கொள்ளும்** கர்த்தாவே என்று ஜெபித்தவர்கள் உண்டு.

நம்முடைய கர்த்தராகிய **இயேசு கிறிஸ்துவின்** வழிகள் வித்தியாசமானது. இயேசு கிறிஸ்து பிதாவிடம் நம்மை குறித்து பரிந்து பேசும்போது எப்படிப்பட்ட வார்த்தைகளை உபயோகிக்கிறார் தெரியுமா?

யோ. 17:15 பிதாவே நீர் இவர்களை **உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளும்படி** நான் வேண்டிக்கொள்ளாமல், நீர் அவர்களை **தீமையிணின்று காக்கும்படி** வேண்டிக்கொள்கிறேன் என்றார்.

வியாதி, பிரச்சனைகள். கடன் இவைகளை தாங்க முடியாமல் உலகத்தை – குடும்பத்தை வெறுத்து நாம் **சாவதை** கர்த்தர் விரும்புவதில்லை, எவ்வளவு வேதனையானாலும் போராட்டமானாலும் அதை **தாங்கி சாட்சியுடன்** நாம் வாழவே விரும்புகிறார். எந்த சூழ்நிலையிலும் **தற்கொலை** சிந்தனை உங்களுக்குள் வந்துவிடக்கூடாது.

ஒரு வேளை நீங்கள் வயதானவர்களாக இருக்கலாம், உங்களால் உங்கள் **பிள்ளைகளுக்கோ** குடும்பத்துக்கோ **ஒரு பிரயோஜனமுமில்லாமல்** படுத்த படுக்கையில் இருக்கிறீர்கள், உங்களை கவணிக்க **பிள்ளைகளுக்கு,** மகளுக்கு அல்லது **மருமகளுக்கு** இயலவில்லைதான். அவர்களும் மனிதர்களே, **சலிப்பு அவர்களுக்கு வரலாம்,** ஆனால் கர்த்தர் ஒரு நோக்கத்தோடு உங்களை **படுக்கையில் படுக்க** வைத்துள்ளார். உங்களால் சில பிரச்சனைகளை, வீட்டில் உங்களை **கவனிப்பவர்கள் அனுபவிக்க வேண்டும்.** நீங்கள் படுக்கையில் இருப்பதால் அந்த வீட்டில் **சில மாற்றங்கள் ஏற்படுவதில் நீங்கள் தடையாக இருக்கிறீர்** என்பதும் உண்மைதான். ஆனால் அவைகளையும் கர்த்தர் அனுமதிக்கிறாரே !

கர்த்தரின் நோக்கம் எதிர்பார்ப்பு என்னவோ? நாம் அறியோம் !

**எலிசா தீர்க்கதரிசி** பெரிய அற்புதங்களை செய்தவன். கர்த்தருக்கு பிரியமானவன்தான் என்றாலும் **வயது முதிர்ந்தபோது** மனிதர்களுக்கு வரும் வியாதி, சரீர பலவீனம் **கண் பார்வை** குறைவு எல்லாம் ஏற்பட்டு படுத்த படுக்கையானான்.,

கர்த்தர் அவனை சுகமாக்கவில்லையே ! **சாதாரண மக்கள்** அனுபவிப்பதுபோல் எல்லா வேதனைகளையும் அனுபவித்து மற்ற மக்கள் மரிப்பதுபோலத்தான் அவன் மரித்துப் போனான். அவர் **தொடர்ந்து ஊழியம் செய்ய வேண்டும்,** தொடர்ந்து **அற்புதங்கள் அவன் மூலம் நடப்பிக்க** வேண்டும் என்று கர்த்தர் விரும்பியிருந்தால் ஒரு வார்த்தையில் அவருக்கு

அற்புத சுகம் அளித்திருப்பாரே ! எலிசாவை பிறப்பித்த நோக்கம் முடிவு பெற்றது. ஆகவே இனி மற்றவர்களுக்கு சாட்சியாக அதாவது வியாதியிலும், முறுமுறுக்காத தன்மையை மற்றவர்கள் காணத்தக்கதாக கர்த்தர் மனிதனின் இயல்பான வியாதியால் மரிக்க அனுமதித்தார்.

இந்த முறையை **விசுவாசிகளான** அல்லது **ஊழிர்களான** நம் எல்லாருடைய வாழக்கையிலும் கர்த்தர் செயல்படுத்த விரும்புகிறார். இதை வாசிக்கும் வாசகர்கள் **2020ல் உண்டான பாதிப்பைப்பற்றி** சோர்ந்து போகாமல் கர்த்தரிடம் அந்த பிரச்சனைகளை **தாங்க, சகிக்க** பெலம் கேட்டு வாங்கி **2021ம் வருட வாழ்க்கையை சமாதானத்துடன் நடத்துங்கள்.**

**202**  **புது வருடத்தில் பிரவேசித்துள்ள வாசகர்கள் அனைவருக்கும் எங்கள் வாழ்த்துதலை கூறிக்கொள்கிறோம்.**

இந்த புதுவருடத்திலும் வித்தியாசமான பிரச்சனைகளை சந்திக்க ஆவியானவரின் பெலத்தோடு ஆயத்தமாவோம்.

நாலுமாவடி சகோ. **மோகன் C. லாசரஸ்** அவர்கள் 2020 புதுவருட வாக்குத்தத்தத்தை **கர்த்தர் கூறினார்** என்று அறிவித்து தன் வழக்கமான **பொய்களை** உதிர்த்தாரே ! 2020ம் வருடம் **தமிழ்நாட்டுக்கு கர்த்தர் செழிப்பை** உண்டாக்குவார். **நீங்கள் நினைத்த காரியம்** 2020ல் **நிச்சயம் நடக்கும்.** உங்கள் **துக்கம் சந்தோஷமாக மாறும்** என்று அவர் கூறிய **மறுமாதமே மோகன் C. லாசரஸ்** கூறிய **செழிப்பு, சமாதானத்தை** அழிக்க **கொரோனா கிருமி** தமிழ்நாட்டை சந்தித்தது. இப்படி ஒவ்வொரு புது வருடத்துக்கும் வாக்குத்தத்தம் கூறும் **ஊழியர்களை நம்பாதீர்கள்.**

## இதை முக்கிய அடையாளமாக கவணியுங்கள்

**ஒரு நாட்டிற்கு செழிப்பு வரும்** என்று கர்த்தர் வாக்குத்தத்த வசனத்தை கூற விரும்பியிருந்தால் **எல்லா ஊழியர்கள்** அல்லது தீர்க்கதரிசி என்று கூறிக்கொள்ளும் ஊழியர்கள் வாயிலும் **ஒரே மாதிரி** வசனம்தானே வெளிபட்டிருக்க வேண்டும். மோகன் சி. லாசரஸிலிருந்து, சகோ. ஸ்டீபன் வரை TVயில் புது வருட வாக்குத்தத்தம் கூறும் சுமார் 11 **ஊழியர்கள்** 2020 **புது வருடத்தில் கூறிய வசனங்கள்** யாவும் **வெவ்வேரானவைகளாக** இருந்ததே எப்படி ? கர்த்தர் தேசத்தை **ஆசீர்வதித்தால்** அது எல்லாருடைய வாயிலும் **ஒரே மாதிரியாக அல்லவா** வசனங்கள் வெளிப்பட்டிருக்கும். ஆகவேதான் கூறுகிறேன் இவர்கள் கூறிய **வாக்குத்தத்தம்** பொய், **கூறிய தீர்க்கதரிசனம் பொய்** என்பது விளங்குகிறதல்லவா ! நான் எழுதிய இந்த விமர்சனத்தை குறித்து நீங்கள் நேசிக்கும் உங்கள் ஊழியர்களிடமே கேட்டு எனக்கு எழுதுங்கள்

☐ **பெரும்பாலான ஊழியர்கள் கூறுகிறார்கள் ஸ்தோத்திர பலி** செலுத்தினால், **அபிஷேகம்** பெற்றால் **உங்கள் வியாதி** சுகமாகும், கடன்கள் மாறும் பிசாசு **ஓடிப்போவான்** என்று கூறுகிறார்கள், இப்படிப்பட்ட ஊழியர்களை **நம்பவேண்டாம் சகோ. ராபின்சனும்** மோகன் C.லாசரஸ்ஸின் உபதேசத்தையே பின்பற்றுகிறார். **அபிஷேகம்** ஒருநாளும் **உங்களை மாற்றாது.** அபிஷேக நாதராகிய **ஆவியானவரின் கனிகள்** உங்கள் வாழ்க்கையில் **காணப்பட்டால் மட்டுமே** பிரச்சனைகள் மாறும். கெக்கே ! பொக்கே !! என்று **அன்னிய பாஷை** பெயரில் நீங்கள் உளரினால் அதில் ஒரு பிரயோஜனமில்லை

**பலியை பார்க்கிலும் கீழ்படிதலே உத்தமம்** 1 சாமு 15:22 மனிதர்கள் நீங்கள் **ஸ்தோத்திர ஆராதனை** என்ற பெயரில் **எத்தனை பெரிய சத்தம்** இட்டாலும் **கைகளை தட்டினாலும், கைகளை வானத்துக்கு நேராக உயர்த்தி** ஜெபித்தாலும் அவைகள் கர்த்தருக்குமுன் **மாயமாலமாகத்தான்** தோன்றுகிறது. **மனுஷன்** முகத்தை பார்ப்பான். **கர்த்தரோ** இருதயத்தை பார்க்கிறார். 1 தீமோ 16:7

இந்த 2021 வருடத்தில் உங்களை சந்திக்கபோகும் **புதிய ரூபம்** எடுத்துவரும் **கெரோனா** கிருமியும் மேலும் **மருமகள் ரூபத்தில்** புதிதாக வரப்போகும் **குடும்ப போராட்டம்** இவைளை மேற்கொள்ள முதலாவது **மனம் திரும்புங்கள்.** வசனத்தின்படி ஜீவித்து **கனிகளை காண்பியுங்கள்.** ஆவியானவர் **உங்களுக்குள்** இருப்பதை கனிகள் மூலமாக நீங்களே உணருவீர்கள். அப்போது உங்களுக்கு உண்டாகும் துன்பத்திலும், வீட்டில் சம்பவிக்கும் **பிரச்சனைகளிலும் நோய், மரணம்,** இவைகளின் மத்தியில் நீங்கள் **ஸ்தோத்திர பாட்டை** பாட முடியும்.

☐ பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவரின் நாமத்தில் வாசகர்கள் யாவரையும் வாழ்த்துகிறேன்.

(நீங்கள் SBI வங்கி Canara வங்கி M.O.. Cheque, D.D. வழியாக நீங்கள் அனுப்பிய காணிக்கை யாவும் பெற்றுக்கொண்டேன். நன்றி)

டாக்டர் **புஷ்பராஜ்**

## ONLINE BANKING (NEFT)

**Dr. M.G.E. PUSHPARAJ**, **SALEM - 636 005. INDIA**

**STATE BANK OF INDIA** (SALEM-1970)

**A/C No: 10764116842** IFSC CODE - IFSC SBIN0001970 -10764116842
SWIFT CODE - SBININBB637- 10764116842

**CANARA BANK - SALEM** (SURAMANGALAM BRANCH)

**A/C No: 1219101013622.** IFSC CODE - IFSC CNRB0001219- 1219101013622.
SWIFT CODE - CNRB0001219 -1219101013622.

# யோவான் ஸ்நானகன்

## அவர் (இயேசு) பெருகவும்...
## ...நான் சிறுகவும் வேண்டும்

**கலாநிதி தியோடர் வில்லியம்ஸ்** *நன்றி :* **சத்திய வசனம்**

ஒருமுறை தமிழ்நாட்டிலே ஒரு சின்ன ஊரிலே கூட்டங்கள் நடத்துவதற்காக பஸ்சிலே போய் அங்கு இறங்கினேன். பஸ் நிறுத்தத்திலே சைக்கிள் ரிக்ஷா ஓட்டுகிற ஒருவர் என்னிடத்தில் முகமலர்ச்சியோடு சிரித்துக்கொண்டே வந்தார். அவர் எனக்கு முன்பின் தெரியாதவர். நான் யார் என்று அவருக்கும் தெரியாது. என்னை வரவழைத்து என்னை தம்முடைய சைக்கிள் ரிக்ஷாவில் ஏறும்படி செய்தார். அங்கே ஏறி உட்கார்ந்தவுடனே வேத வசனம் ஒன்றை அவர் சைக்கிள் ரிக்ஷாவில் ஒட்டிவைத்திருந்ததை நான் பார்த்தேன். அவரோடு பேச்சு கொடுக்க ஆரம்பித்தேன். அவர் ஒரு விசுவாசி என்று கண்டுகொண்டேன். அவர் ஒரு நல்ல அருமையான விசுவாசி, சாட்சியாக வாழ்கிறவர் என்பதையும் அறிந்துக் கொண்டேன்.

பிறகு அந்த ஊரிலுள்ள மற்ற விசுவாசிகளும், தேவ மக்களும் அவரை குறித்து சாட்சி சொன்னார்கள். ஐயா, அந்த ரிக்ஷாக்காரர் தாழ்மையான ஒரு மனிதர். பாவத்தில் வாழ்ந்து வந்த அவர் **குடிபழக்கத்திலிருந்தும்** ஆண்டவராகிய கிறிஸ்துவினாலே **விடுவிக்கப்பட்டு** இப்பொழுது சாட்சியாக வாழ்கிறார். அவருடைய ரிக்ஷாவிலே ஏறி உட்காருகிற யாரிடத்திலும் இயேசுவைக் குறித்து சொல்லாமல் இருக்கமாட்டார். அவருடைய மனமகிழ்ச்சியையும் மனத்தாழ்மையையும் அன்பையும் பார்த்துவிட்டு அநேகர் இயேசுவை அறிந்திருக்கிறார்கள்.

அதற்காக நான் ஆண்டவரை துதித்தேன். பார்த்தீர்களா ! பெரிய பணக்காரராக இருந்தால் மட்டும்தான் சந்தோஷமாகவும் மன மகிழ்ச்சியாகவும் இருப்பார்கள் என்று நாம் யோசிக்க அவசியமில்லை. அந்த மனிதரிடத்தில் பெரிய வாகனம் ஒன்றும் இல்லை. அவருக்கு இருந்ததெல்லாம் ஒரு சைக்கிள் ரிக்ஷா அவ்வளவுதான். அதின் மூலமாக தனது வயிற்றுப்பிழைப்பை நடத்திக்கொண்டிருந்தார். ஏழையான ஒரு மனிதனாயிருந்தாலும் எவ்வளவு ஒரு மனநிறைவு ! எவ்வளவு பெரிய சந்தோஷம் !!

திருமறையிலும் மகிழ்ச்சிக்கென்று ஒரு மனிதரை நான் எடுத்துக்காட்ட வரும்புகிறேன். அவர்தான் **யோவான்**. அவரை **யோவான் ஸ்நானகன்** என்று நாம் அழைக்கிறோம்.

திருமுழுக்கு கொடுக்கும் யோவான் என்றும் சிலர் அழைப்பார்கள். இவரைப்பற்றி மாற்கு 1:6-8 அகிய வசன பகுதியில் பார்க்கிறோம். இந்த யோவான் ஒட்டக மயிர் உடையைத் தரித்து தன் அறையிலே வார்கச்சையைக் கட்டிக்கொண்டவனாக வெட்டுக் கிளியையும் காட்டுத்தேனையும் புசிக்கிறவனாயும் இருந்தார். இப்படிப்பட்ட ஒரு மனிதன் சந்தோஷமாய் இருக்க முடியுமா ? அவனுடைய உடையைப் பாருங்கள். ஒட்டக மயிர் உடையைத் தரித்து தன் அறையிலே வார்கச்சையாக கட்டிக்கொண்டவன். இந்த நாட்களிலே அநேகருடைய சந்தோஷம் எதைச் சார்ந்திருக்கிறது தெரியுமா? விலையுயர்ந்த உடையைச் சார்ந்திருக்கிறது. எந்த மாதிரி புடவையைக் கட்டிக்கொள்ளுகிறோம். எந்த மாதிரி சல்வார் அணிந்திருக்கிறோம். சுடிதார் அணிந்துகொள்கிறோம் என்பதைக் குறித்து சில பெண்களுக்கு சந்தோஷம். எந்த மாதிரி பேண்ட் அணிந்து கொள்ளுகிறோம். சட்டை அணிந்துகொள்ளுகிறோம் என்பதைக் குறித்து சில ஆண்களுடைய சந்தோஷம், சில தம்பிமார்களுடைய சந்தோஷம்கூட அப்படித்தான் இருக்கிறது. தாங்கள் விரும்பின உடையை வாங்கி தரவில்லை என்றால் அப்பா. அம்மாவுக்கு அவர்கள் கொடுக்கிற உபத்திரவம் பெரிதாயிருக்கும். அன்பானவர்களே, மன நிறைவு மனமகிழச்சி என்பது இப்படிப்பட்ட ஆடம்பரத்தில் இதையெல்லாம் சார்ந்திருக்காது. ஒன்று வாங்கிக்கொடுத்தால் அதைவிட மேலான ஒன்று வாங்கிக்கொடுக்க பிள்ளைகள் அடம்பிடிப்பார்கள் அல்லவா ?

இன்னும் பாருங்கள் யோவானாகிய இவரைப்பற்றி வேதம் என்ன சொல்லியிருக்கிறது? வெட்டுக்கிளியையும் காட்டுத் தேனையும் புசிக்கிறவனாய் இருந்தான். ஐயையோ. இதுவா ஆகாரம் ? இதையா சாப்பிடுவது? நல்ல ஓட்டலில் போய் பிரியாணி சாப்பிட்டால் தான் சந்தோஷமென சிலர் எண்ணுகிறதுண்டு. எங்க வீட்டுல எப்போது பார்த்தாலும் இரசமும் துவையலும்தான். நாங்க எங்க சந்தோஷமாய் இருக்கிறாம் என்று கூறுவது? இப்படி கூறி குறைவுபடுகிறவர்களும் உண்டு. என் அருமையான சகோதரனே, நல்ல சாப்பாடு கொடுக்கவில்லை என்று சொல்லி உன் மனைவியை கடிந்துகொள்ளுகிறாயா? சகோதரியே நீ கொடுக்கற சம்பாத்தியத்துல நீ கொடுக்கிற பணத்துல என்னத்த சமைத்துக் கொடுப்பது என்று கணவனிடத்திலே கேட்கிறாயோ? சாப்பாட்டைச் சார்ந்திருப்பதில்லை சந்தோஷம் ! அப்படியெல்லாம் இருந்திருந்தால் யோவான் ஸ்நானகன் சந்தோஷமாக இருந்திருக்க முடியுமே?

இவர் என்ன சொல்கிறார் பாருங்கள், **மணவாட்டியை** உடையவனே மணவாளன்: **மணவாளனுடைய தோழனோ** அருகே நின்ற அவருடைய சொல்லைக் கேட்கிறவனாய் மணவாளனுடைய சந்தோஷத்தை குறித்து மிகவும் சந்தோஷப்படுகிறான். இந்த சந்தோஷம் **இப்பொழுது எனக்குச் சம்பூரணமாயிற்று** (யோவான் 3:29) என்று கூறுகிறார்.

என மகிழ்ச்சி **நிறைவு பெற்றதென்று** யோவான் ஸ்நானகன் பெருமிதத்தோடு கூறுகிறார். ஏன் யாராவது இவருக்கு சொத்து எழுதி வைத்து விட்டார்களா? இல்லை வேறு எங்கேயாவது அவருக்கு விருந்து ஆயத்தம் பண்ணியிருக்கிறார்களா? அல்லது அவருக்கு அழகான நல்ல ஆடை அணிந்து கொள்ளும்படி ஆயத்தம்பண்ணி வைத்திருக்கிறார்களா? இல்லை எப்படி யோவானுடைய சந்தோஷம் நிறைவாயிற்று ? அவனுடைய வாழ்க்கையிலே சுயம் **ஆட்கொள்ளவில்லை.** சுயம் **அவரை நிறைக்கவில்லை** அவ்வளவுதான் !

நீர் யாரென்று அவரைக் கேட்டுக்கும்படி அவரிடத்தில் சிலரை அனுப்பினார்கள். அவர்கள் யார் தெரியுமா? பரிசேயர்களும் பிரதான ஆசாரியனுடைய ஆட்களும் ஆவர். யோவானிடத்தில் வந்து நீர் யாரென்று கேட்கிறார்கள் யாராவது சிலரிடத்திலே வந்து நீ யாரப்பா என்று கேட்டால் என்ன சொல்வார்கள் தெரியுமா? இல்லாததும் பொல்லாததெல்லாம் சொல்லி தங்களைப் பெரிய ஆளாய் காட்டிக்கொள்வார்கள். இந்த நாட்களில் இல்லாத பட்டங்களை எல்லாம் இருக்கிறது போல காட்டிக்கொள்கிறதில்லையா? அப்போதுதான் அவர்கள் மகிழ்ச்சியடைவார்கள், ஆனால் இதெல்லாம் அல்ல, இதெல்லாம் இன்றைக்கு இருக்கும் நாளைக்கு போய் விடும். இவரிடத்திலே நீர் யார் என்று கேட்டபோது அவர் என்ன சொல்லுகிறார் என்று யோவான் 1:20-23இல் வாசிக்கிறோம்.

அவன் மறுதலியாமல் அறிக்கையிட்டதுமன்றி **நான் கிறிஸ்து அல்ல** என்றும் அறிக்கையிட்டான், அப்போது அவர்கள் பின்னே நீ யார்? **நீர் எலிசாவா** என்று கேட்டார்கள் அதற்கு நான் அவன் **அல்ல என்றான்.** நீர் **தீர்க்கதரிசியானவரா** என்று கேட்டார்கள். அதற்கும் அல்ல என்றான். அவர்கள் பின்னும் அவனை நோக்கி நீர் யார் ? எங்களை அனுப்பினவர்களுக்கு நாங்கள் உத்தரவு சொல்லும்படிக்கு உம்மைக்குறித்து என்ன சொல்லுகிறீர் என்று கேட்டார்கள். அதற்கு அவன் **கர்த்தருக்கு வழியைச் செவ்வைப் பண்ணுங்கள்** என்று ஏசாயா தீர்க்கதரிசி சொன்னபடியே நான் வனாந்திரத்திலே **கூப்பிடுகிறவனுடைய சத்தமாயிருக்கிறேன்** என்றான். அனுப்பப்பட்டவர்கள் பரிசேயராய் இருந்தார்கள். அவர்கள் அவனை நோக்கி நீர் கிறிஸ்துவுமல்ல, எலியாவுமல்ல தீர்க்கதரிசியானவருமல்லவென்றால் ஏன் ஞானஸ்நானம் கொடுக்கிறீர் என்று கேட்டார்கள். யோவான் அவர்களுக்கு பிரதியுத்தரமாக: நான் ஜலத்தினாலே ஞானஸ்நானங் கொடுக்கிறேன். நீங்கள் அறியாதிருக்கிற ஒருவர் உங்கள் நடுவில் நிற்கிறார். அவர் எனக்குப் பின்வந்தும் அவர் **என்னிலும் மேன்மையுள்ளவர்**, அவருடைய **பாதரட்சையின் வாரை அவிழ்ப்பதற்கும் நான் பாத்திரனல்ல** என்றான் (யோவான் 1:20-27) என்ன தாழ்மையான பதில்.

இத்தனைக்கும் இந்த **யோவான் ஸ்நானகன் இயேசுவுக்கு** உறவினர். **இயேசுவைவிட** வயதிலே **மூத்தவர்.** அப்படியிருந்தும் அவர் தன்னைத் தாழ்த்தி, அவர் **பெரியவர்,** நான் **சிறியவன்** என்று **தன்னைத் தாழ்த்தினார்.** அவருடைய **காலின் செருப்பினுடைய வாரை அவிழ்ப்பதற்கும்** நான் பாத்திரவான் அல்ல என்று சொல்லுகிறார். நான் கிறிஸ்து அல்ல என்றும் கூறுகிறார். மேலும் நான் பெரிய தீர்க்கதரிசியாக்கும், நான் அந்த இயேசுவின் மரபிலே. அந்த வ**ம்சத்திலே வந்தவன்** என்று பெருமையாக சொல்லியிருக்கலாம் அல்லவா? அப்போதும் அவர் **அல்ல, அல்ல** என்றுதான் சொல்லுகிறார்.

அருமையான சகோதரனே, முக்கியமாய் ஊழியத்தில் இருக்கும் உன்னிடத்தில் நான் ஒன்றைக் கேட்கிறேன். ஊழியத்திலே உனக்கு பெருமை தருவது எது ? மனிதன் கொடுக்கும் பட்டங்களா? பாராட்டுகளா ? புகழ் மாலைகளா ? அல்ல. **ஆண்டவர் பார்வையிலே** நீ யார் என்பதுதான் உன்னை காட்டுவதாகும். உலகம் எப்படி வேண்டுமானாலும் போகட்டும். உனக்கு ஏன் அந்த வழி? **யோவான்** ஸ்நானகன் சொன்னார். நான் **எலியாவுமல்ல** நான் **தீர்க்கதரிசியானவருமல்ல.** பின்னே நீர் யாரைய்யா? என்று கேட்கிறார்கள். அதற்கு அவர் நான் வனாந்திரத்திலே கூப்பிடுகிறவனுடைய **சத்தமாயிருக்கிறேன்** என்றார். இதோ மேசியா வருகிறார். சீக்கிரமாய் வருகிறார். நான் அவருக்கு முன்னோடி என்கிறார். அப்படி கூப்பிடுகிற ஒரு ஆளிடம் எவ்வளவு தாழ்மை என்பதை பாருங்கள். தன்னை ஒன்றும் அற்றவனாக காட்டிக்கொள்ளுகிறார். அது மட்டுமல்ல. மணவாளர் அவர். நான் மணவாளனுடைய தோழன் என்று கூறுகிறார். **அந்த சூழ்நிலையிலேதான்** என்னுடைய **சந்தோஷம் நிறைவு பெறுகிறது** என்று யோவான் கூறினார்.

என்றைக்கு வாழ்க்கையில் **சுயத்தை** மையத்தில் வைத்து நம்முடைய புகழையும் பெருமையையும் பெரிதுபடுத்துகிறோமோ. அன்றைக்கு நம்முடைய சந்தோஷம் பாதிக்கப்படும். என்னுடைய சொந்த வாழ்க்கையின் அனுபவத்திலே நான் சொல்லுகிறேன். ஐயோ. எனக்கு கொடுக்க வேண்டிய மரியாதையை எனக்குக் கொடுக்கவில்லையே, நான் இங்கே **கன்வென்ஷனுக்காக** வந்திருக்கிறேன். நான் கூட்டம் நடத்த வந்திருக்கிறேன். என்னைக் கொண்டுபோய் **ஒரு சின்ன அறையிலே** போட்டுவிட்டார்களே? சாப்பாடுகூட சரியில்லையே. இதைப்பற்றியே நான் பேசிக்கொண்டிருந்தால் என் வாழ்க்கையிலே ஆசீர்வாத பெருக்கு இருக்குமா ? ஜீவத்தண்ணீருள்ள நதிகள் என் உள்ளத்திலிருந்து பெருக்கொடுத்து ஓட முடியுமா? எல்லாம் வற்றிப் போகுமே ? எல்லாம் உலர்ந்து போகுமே. வெறும் **வாய் சத்தம்** இருக்கலாம். **ஆரவாரம்** இருக்கலாம். **ஆர்ப்பரிப்பு** இருக்கலாம். ஆனால் **ஆத்துமாக்களை இரட்சிப்பிற்குற்கென்று** தொடும் வல்லமை இல்லாமல் போகுமே !

என் அருமையான ஊழியக்காரனே வெறும் தம்பட்டம் மனிதனுடைய புகழ்ச்சி அல்லது பாராட்டுகள் இதைச்சார்ந்து, உன் ஊழியத்தை நீ நடத்துவாயானால் ஜீவதண்ணீருள்ள நதிகள் உன்னிடத்திலிருந்து புறப்பட்டு சென்று மற்றவர்களை வாழ வைக்க முடியாது. இப்படி எத்தனையோ சூழ்நிலைகளிலே நம்மை உயர்த்தி காட்டும்படியான ஒரு சோதனை நமக்கு வருகிறதல்லவா? உள்ளங்களை ஆராய்கிறவர் பார்த்துக்கொண்டிருப்பார். நம்மைப்பற்றி அவருக்குதான் தெரியும். வேறு யாருக்கும் தெரியாது. இவைகளை நாம் உள்ளத்தில் வைத்து செயல்படுவோமானால் எவ்வளவு பெரிய ஆசீர்வாதம் இல்லையா!

ஒரு சமயம் யோவானுடைய சீஷர்கள் யோவானிடம் வந்து சொல்லுகிறார்கள். இதோ எனக்குப்பின்னாலே வருகிறவர் என்று எங்களுக்கு ஒருவரைக் காட்டிக்கொடுத்தீரே. அவர் யோர்தான் நதியிலே திருமுழுக்கு கொடுத்துக்கொண்டிருக்கிறார். அவரை பின்பற்றி எல்லாரும் போகின்றனர் என்று சொன்னார்கள். (இயேசு திருமுழுக்கு கொடுக்கவில்லை. அவருடைய சீஷர்கள்தான் கொடுத்தார்கள் என்று வேதத்திலே நாம் பார்க்கிறோம்.) யோவானை பின்பற்றினவர்களில் அநேகர் இயேசுவுக்கு பின் சென்றுவிட்டார்கள். அதுமட்டுமல்லா **யோவான். அந்திரேயா** என்பவர்கள் யோவானுக்கு சீஷனாய் இருந்தவர்கள். அவர்களும் யோவானை விட்டு இயேசுவின் சீஷர்களாக மாறி இயேசுவுக்கு பின்னே போய்விட்டனர்.

இப்படி அவர்கள் போய்விட்டவுடனே யோவானுடைய சீஷருக்கு இது பொறுக்க முடியவில்லை. ஐயோ எங்களுடைய போதகர், எங்களுடைய குரு அவருடைய பெயர் **கீழே போகிறது**. அவருடைய கூட்டம் **சிறியதாகிறது.** ஆனால் **இயேசுவினுடைய கூட்டம் பெரிதாகிக் கொண்டிருக்கிற**து என்று பொறாமைபட்டு யோவானிடத்தில் அதை முறையிடுகிறார்கள். அதற்கு யோவான் என்ன சொல்லுகிறார் தெரியுமா ?

அவர்கள் யோவானிடத்தில் வந்து ரபீ உம்முடனேகூட யோர்தானுக்கு அக்கரையில் ஒருவர் இருந்தாரே அவரை குறித்து நீரும் சாட்சி கொடுத்தீரே. அதோ அவர் ஞானஸ்நானங் கொடுக்கிறார். எல்லாரும் அவரிடத்தில் போகிறார்கள் என்றார்கள். யோவான் பிரதியுத்தரமாக **பரலோகத்திலிருந்து ஒருவனுக்கு கொடுக்கப்பட்டலொழிய,** அவன் ஒன்றையும் **பெற்றுக்கொள்ளமாட்டான்.** நான் கிறிஸ்துவல்ல, அவருக்கு முன்னதாக அனுப்பப்பட்டவன் என்று நான் சொன்னதற்கு நீங்களே சாட்சிகள்... அவர் **பெருகவும்** நான் **சிறுகவும்** வேண்டும் என்றான். (யோவான் 3:26-30) இதுதான் இயேசுவைவிட மூத்தவரான யோவானின் பதிலாக இருந்தது.

என் அருயையான சகோதரனே சகோதரியே, ஊழியத்தில் இருக்கும்நீ பெறாமைக்கு உள்ளாகி அந்த பொறமையின் அடிப்படையிலே இன்னொரு ஊழியனை சிறுமைப்படுத்த

என்னவெல்லாமோ செய்கிறாயே ! இது பெரும் தவறு, உனக்குத் தெரியமா? கர்த்தர் உன்னை பார்த்துக்கொண்டிருக்கிறார். ஒருவனை **உயர்த்துகிறவரும்** அவர், **தாழ்த்துகிறவரும்** அவர், **ஆசீர்வதிக்கிறவரும்** அவர். நீ ஏன் குறுக்கே நிற்கவேண்டும்? உன்னுடைய மகிழச்சியும் சந்தோஷமும் **உனக்கு வரும் கூட்டத்தை** சார்ந்திருக்குமானால், உன்னுடைய **புகழை சார்ந்திருக்குமானல்** நீ துக்கப்படுவாய், துக்கப்படுவதுமட்டுமல்ல, மிகுந்த சஞ்சலத்திலிருப்பாய். அந்த தவறான எண்ணம் காரணமாக எப்பொழுதுமே உன் உள்ளத்திலே மகிழ்ச்சி இருக்காது. **கர்த்தருக்குள் சந்தோஷமாயிருப்பதே அவர் தரும் பெலன்** என்று திருமறை சொல்லுகிறதே. **அந்த பெலன்** உன்னிடத்தில் இருக்காது. ஜாக்கிறதை.

ஆனால் கர்த்தர் **என்னை பார்த்துக்கொள்வார்.** அவருடைய ஆசீர்வாதமும் பிரசன்னமும்தான் எனக்கு முக்கியம் எனக் கருதி மற்றவர்கள் நம்மைவிட சிறப்பாக வாழ்ந்தாலும் அதைப்பற்றி நாம் **பொறாமை** படமாட்டோம். **என்னுடைய ஊழியத்தை அவர் சித்தப்படி** நான் நிறைவேற்றுவேன் என்று மனதிருப்தியோடு இருப்பாயானால் இந்த **மகிழ்ச்சிதான் உன்னை உயர்த்தும்**. என் அருமையான சகோதரனே, சகோதரியே அவர் **பெருகவேண்டும்**. நான் **சிறுகவேண்டும்.** இது கர்த்தர் எனக்கு கற்றுக்கொடுத்த பாடம்.

பொறாமையின் எண்ணம் **என் ஊள்ளத்திலும் வந்ததுண்டு.** ஐயோ, நான் சீர்குலைந்து போவோனோ என்ற அச்சமும் வந்ததுண்டு. ஆனால் அந்த வேளையில் எல்லாம் கர்த்தர் **என்னை உறுதிப்படுத்தி நிச்சயப்படுத்தி சொன்னது என்ன தெரியுமா? நான் உன்னை அழைத்தேன்,** என் சித்தத்தை செய்வதிலேயே **உன் கவனத்தை செலுத்து** என்னை **பிரியப்படுத்துவதிலேயே** உன் **கவனத்தை செலுத்து** என்று சொன்னார். ஆம் அதைத்தான் பவுல் அப்போஸ்தலன் கலாத்தியற்கு எழுதின நிரூபம் 2வது அதிகாரத்திலேயே 20வது வசனத்தில் இவ்வாறு கூறுகிறார்.

**கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்,** ஆயினும் பிழைத்திருக்கிறேன். இனி நான் அல்ல. கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார். நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த **தேவனுடைய குமாரனைப்பற்றிப் விசுவாசித்தினாலே பிழைத்திருக்கிறேன்.** (கலா. 2:20) என்றார்.

என் அருமையான சகோதரனே, சகோதரியே குடும்ப வாழ்விலும் சரி, அல்லது ஊழியத்திலும் சரி, சபையிலும் சரி, எந்த சூழ்நிலையிலும் நான் சிறுகவேண்டும், கிறிஸ்து பெருகவேண்டும் என்று ஒப்புக்கொடுக்கும்போது நிச்சயமாய் நீ வாழ்வாய்! மகிழ்ச்சி பெறுவாய்! உன்னை தேவன் மென்மேலும் எடுத்து பயன்படுத்துவார்!!!

# தாமதம்

தேவனின் உள்ளத்தைப் புரிந்துகொண்டால், தேவையுள்ள ஊழிய இடங்களைத் தெரிந்துகொள்வது எளிதானது. வழியில் இருக்கும் அனைத்தையும் விட்டு விலகியே பயனி க்க விரும்பினால். அவரது விருப்பத்தை நிறைவேற்றும் வாய்ப்பையும் நாம் தவறவிட்டுவிடக்கூடும். பரிதாபமாகக் கிடப்போரை பாதசாரிகளாகக் கடந்து செல்லும் போக்கு, அவ்வழியே வந்த நோக்கத்தை இழந்துவிடப்பண்ணும், துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும் பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும் (சங். 1:1) என்று விலகிச் செல்லவேண்டிய கூட்டத்தை இனம் கண்டுகொள்ளும் அதே வேளையில் நாம் **நடக்க வேண்டிய நாம் நிற்க வேண்டிய உட்காரவேண்டிய** இடத்தையும் நாம் **அடையாளம் கண்டுகொள்ளவேண்டியது** நாம் கற்றுக்கொள்ளவேண்டிய அடுத்த பாடம். ஆகும்.

## தேவ மனிதனின் தாமதம்

**சவுல் ராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்டபோது தேடிப்போன கழுதைகள்** அகப்படும். **மூன்று மனுஷர்கள்** சந்திப்பார்கள், **தீர்க்கதரிசிகளின்** கூட்டத்திற்கு எதிர்படுவாய், **கர்த்தருடைய ஆவி** உன்மேல் இறங்குவார் என்று சாமுவேல் சொன்ன அடையாளங்கள் எல்லாம் **அன்றைய தினமே** நேரிட்டது. (1 சாமு. 10:9) எனினும் நீ எனக்கு முன்னே கில்காலுக்கு இறங்கிப்போ. சர்வாங்க தகன பலிகளையும் சமாதான பலிகளையும் செலுத்தும்படிக்கு **நான் உன்னிடத்தில் வருவேன்**. நான் உன்னிடத்தில் வந்து நீ செய்ய வேண்டியதை உனக்கு அறிவிக்கும் மட்டும் **ஏழுநாள் காத்திரு** (1 சாமு10:8) என்று சவுலிடம் சொன்னதோ ஒரு வருடத்திற்கு பின்பு நடந்தது (1சாமு 13:1) இந்த ஒரு வருட தாமதத்தால் **அவனிடம் கீழ்படிவதே காணாமற் போய்விட்டது.** கிலகாலுக்கு சாமுவேல் வரத் **தாமதமானபோது சர்வாங்க தகன பலியை சவுலே செலுத்திவிட்டான்.** (1 சாமு. 13:9) குறித்த நாட்களின் திட்டத்திலே நீர் வராததினாலேயே இப்படிச் செய்தேன் என்று சவுல் சொன்னபோதிலும் அது ஏற்றுக் கொள்ளப்படவில்லை. (1 சாமு 13:11-13) பிரியமானவர்களே ! **தேவ மனிதர்களுக்காகக் காத்திருக்கவேண்டியது எத்தனை அவசியம், தேவையுள்ள மக்கள் மத்தியில் வந்துகொண்டிருக்கும் அவர்களது காலச்சக்கரத்தில் தவிர்க்கக்கூடாத** தாமதங்கள் ஏற்படலாம். இதனைப் புரிந்துகொண்டால் இருபுறமும் இழப்புகளைத் தவிர்த்து விடலாம்.

எரிகோவுக்குப் போய்க்கொண்டிருந்த ஓர் மனிதன் கள்ளர் கையில் அகப்பட்டான். அவர்கள் அவன் வஸ்திரங்களை உரிந்துகொண்டு, அவனைக் காயப்படுத்தி, குற்றுயீராக விட்டுவிட்டுப் போனார்கள். குற்றுயிராக ஓர் மனிதன் கிடப்பதை **தற்செயலாகப் பார்த்த ஆசாரியன்,** அந்த மனிதனைக் கண்டபோதிலும், பக்கமாக விலகிப்போனான். அப்படியே லேவியனும் அந்த இடத்துக்கு வந்து, அவனைக் கண்டு, பக்கமாய் விலகிப்பேனான். (லூக் 10:30-32)

குறிப்பிட்ட ஒரு காரியத்தின் மீதோ, **சம்பிரதாயத்தின்** மீதோ அல்லது **பாரம்பரியத்தின்** மீதோ கவனத்தை குவித்திருக்கும்போது தற்செயலாகக் காணப்படும் முக்கியமானதை பலர் கவனத்தில் கொள்ளுவதில்லை, முன்னே நிற்கும் பாரம்பரிய நோக்கமோ வேகத்தை முடுக்கிவிடுவதால் தற்செயலானவைகளை விட்டு தப்பிப்போகவே நினைக்கின்றனர். **பிரதானமானவைகளை** நோக்கிச் சென்றுகொண்டிருக்கும் வேகத்தில், **பசியானவர்ளையும்** வியாதியுள்ளவர்களையும், **நெருக்கப் பட்டவர்களையும்,** சிறையானவரையும், **துன்பத்திற்குள்ளானவர்களையும்** ஒடுங்குண்டோர் களையும் பரிதாபமாகவே விட்டுவிடுகின்றனர். அன்று அந்த **ஆசாரியனும் லேவியனும்** குறிப்பிட்ட நேரத்தில் தாங்கள் சேரவேண்டிய இடத்திற்கு போய்ச் சேர்ந்திருப்பார்கள். **பாரம்பரியத்தைப்** பாதுகாத்திருப்பார்கள். ஆனால் அந்த இரண்டு ஊழியர்களின் பயணம் வழியில் **கிடந்தவனையோ** மரணத்துக்கு நேராக வழியனுப்பி வைத்தவர்களாவே காணப்பட்டது

பசியாயிருந்தேன் நீங்கள் எனக்குப் போஜனங் கொடுக்கவில்லை. தாகமாயிருந்தேன் நீங்கள் என் தாகத்தைத் தீர்க்கவில்லை. அந்நியனாயிருந்தேன். நீங்கள் என்னைச் சேர்த்துக் கொள்ளவில்லை. வஸ்திரமில்லாதிருந்தேன்., நீங்கள் எனக்கு வஸ்திரங்கொடுக்கவில்லை. வியாதியுள்ளவனாயும், காவலில் அடைக்ககப்பட்டவனாயும் இருந்தேன். நீங்கள் என்னை விசாரிக்க வரவில்லை என்பார் இயேசு. ஆண்டவரே, உம்மைப் பசியுள்ளவராகவும், தாகமுள்ளவராகவும் அந்நியராகவும் வஸ்திரமில்லாதவராகவும், வியாதிப்பட்டவராகவும் , காவலிலடைக்கப்பட்டவராகவும் **நாங்கள் எப்பொழுது கண்டு.** உமக்கு உதவி செய்யாதிருந்தோம். (மத். 25:42-44) என்று கேட்டால் **அதற்கான விடை வந்த வழியிலேயே விடப்பட்டதாயிருக்கு**ம் நம்முடைய நிலை என்ன ? தற்செயலாக நடைபெறும் காரியங்கள் **நம்மை தாமதப்படுத்தலாம்** எனினும் நமது பிரயாணத்தையோ அது தடுத்து நிறுத்த முடியாது. தாமதம் மட்டுமே சம்பவிக்கும்.

**எத்தனையோ பேருடைய காயங்களில் திராட்சரசம் வார்க்க வேண்டியிருப்பதினாலும் அவர்களை சத்திரத்தில் (ஆலயத்தில்) சேர்க்கவேண்டியிருப்பதினாலும் சத்திரக்காரர்கள் இன்னும் அவர்களைக் கவனித்து சுகப்படுத்தவேண்டிய திருப்பதினாலும் தான். இயேசுவின் வருகை இன்னும் தாமதமாகிக்கொண்டேயிருக்கின்றது,**

இயேசு ஜனங்களை அனுப்பி விடுகையில் தம்முடைய சீஷர்கள் படவில் ஏறி அக்கரையில் பெத்சாயிதாவுக்கு எதிராக, தமக்கு முன்னே போகுப்படி அவர்களைத்

துரிதப்படுத்தினார். அவரோ ஜெபம் பண்ணும்படி ஒரு மலையின் மேல் ஏறினார். இயேசுவுக்கு ஜெபத்தின் தொடக்க வேளை, எனினும் சீஷர்களுக்கோ நடுக்கடலில் ஆபத்தான சூழ்நிலை. சீஷர்களின் கண்ணுக்கு இயேசு மறைந்துவிட்டார். எனினும் **இயேசுவின் கண்கள்** சீஷர்களை **பார்த்துக்கொண்டேயிருந்தனவே. தண்டுவலிக்கிறதில் வருத்தப்படுகிறதை அவர் கண்டு** என்றல்லவோ வேதத்தில் வாசிக்கிறோம் நம்முடைய கண்களுக்கு அவர் தொலைவில் உள்ளவரைப்போல் தென்பட்டாலும் **அவரது கண் பார்வைக்குள்தான் நாம்** வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதுதான் **நற்செய்தி.** கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக்கொண்டிருக்கிறது. எனவே இந்த விஷயத்தில் நாம் மதியில்லாதவர்களாக இருந்துவிடக்கூடாது. (2 நாளா 16:9) அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை. (எபி. 4:13) உம்முடைய ஆவிக்கு மறைவாக எங்கே போவேன். சமுத்திரத்தின் கடையாந்தரங்களில் போய் தங்கினாலும் **அங்கேயும் உமது கை என்னை நடத்தும்** (சங். 139:7,9,10) என்பதுதானே சங்கீதகாரனின் நிருபணம் அவர் சமீபத்திற்கு மாத்திரமா தேவன், தூரத்திற்கும் தேவன் (எரே. 23:23)

ஒருமுறை சீஷர்கள் இயேசுவோடு படகிலே பயணித்துக்கொண்டிருந்தபோது இயேசு நித்திரையாயிருந்த நேரத்தில், அலையும், பெருங்காற்றும் உண்டானது. ஆண்டவரே! எங்களை இரட்சியும், மடிந்து போகிறோம் என்றபோது (மத். 8:25) இயேசு அந்த சூழ்நிலையை அமைதலாக்கினார். இபபோதோ தூங்கிக்கொண்டிருந்தாலும் பரவாயில்லை. தூரத்தில் விட்டுவிட்டு வந்துவிட்டோமே என்று சீஷர்கள் நினைத்திருக்கலாம். (மத். 14:22,23) அந்த வேளையிலும் **ஜெபிக்கும்படியாகச் சென்ற இயேசு துரிதமாக அவர்களை வந்து சேர்த்தாரே.** இயேசு அவசரமாக கடலில் நடந்துவந்ததற்குக் காரணம் உண்டு. சீஷர்கள் ஏறின ஒரே படவு தவிர அங்கே **கரையில் வேறொரு படகும் இல்லை.** (யோவான் 6:22) நமக்கு படகு தேவை அவருக்கோ பாதமே போதும், மேலும் உதவி செய்யும்படி வருகிறவரைக் கண்டு. **ஆவேசம் என்று சீஷர்கள் அலறினதே அவர் கடந்துபோகிறவர்போல் காணப்பட்டதற்குக் காரணம்.** (மத்.6:45-48)

**ஊழியர்களை** ஜனங்கள் தேடிவரும்போது **ஜெபித்துக்கொண்டிருக்கின்றார்** எனவே **இப்போது பார்க்கமுடியாது.** என்று உதவியாளரே, **துணைவியாரோ** பிள்ளைகளோ. அலுவலகத்திலுள்ளோர்களோ அப்படிப்பட்ட **பதில் சொல்வது சரியா?** என்று சிந்தித்துப் பார்த்தால் **குற்றுயிராயிருப்பவர்களுக்கே முதல் உதவி என்பது தெளிவாகவே தெரியவரும். ஆண்டவருக்குரியவைகளை மாத்திரமே கணக்கில் காட்டி அடுத்தவரை கண்களிலிருந்து கழித்துவிடாதபடி கவனமாயிருப்போம்.**

இயேசு நாயீன் ஊரின் வாசலுக்குச் சமீபித்தபோது மரித்துப்போன ஒருவனை அடக்கம் பண்ணும்படி கொண்டு வந்தார்கள். கைம்பெண்ணாயிருந்த அவனது தாய் அழுது **ஊர் வெளியே வந்துக்கொண்டிருக்கும்போது இயேசு ஊருக்கு உள்ளே நுழைந்துகொண்டிருக்கின்றார்.** இது தற்செயலாக நடந்ததுதான் எனினும். இயேசு அந்த பெண்ணைப் பார்த்து. அவள் மேல் மனதுருகி அழாதே என்று சொல்லி கிட்டவந்து பாடையைக் தொட்டார். அதைச் சுமந்தவர்கள் நின்றார்கள். அப்பொழுது அவர். வாலிபனே எழுந்திரு என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார். மரித்தவன் எழுந்து உட்கார்ந்து பேசத் தொடங்கினான். அவனை அவன் தாயினிடத்தில் ஒப்புவித்தார். எல்லாரும் பயமடைந்து மகா தீர்க்கதரிசியானவர் நமக்குள்ளே தோன்றியிருக்கிறார் என்றும். தேவன் நமது ஜனங்களைச் சந்தித்தார் என்றும் சொல்லி **தேவனை மகிமைப்படுத்தினார்கள்.** (லூக், 7:12-16) அழுதுகொண்டிருந்தவர்கள் ஆனந்தமடைந்துவிட்டார்கள்.

பிரியமானவர்களே, **துக்கத்தோடு இருக்கும் ஒரு குடும்பத்தை வழியில் கண்டுகொள்ளாமல் ஊருக்குள்ளே சென்றால் ஊர் உங்களுக்கு காலியாகவே இருக்கும்** ஊரே வெளியே போய்விட்ட பின்னர், அங்கு சென்று என்ன பிரயோஜனம் அங்கு யாருக்குப் பிரசங்கிப்பது. நிற்க வேண்டிய இடத்தில் நின்றால் அதனையே **பிரசங்க பீடமாக** மாற்றிவிடலாம்.

**ஊருக்கு வெளியே ஊருக்கு உள்ளே – வழியில் விழியில்லாதவன்**

இயேசுவும் அவருடைய சீஷர்களும் எரிகோவுக்கு வந்து அங்கிருந்து புறப்படுகிறபோது. அவரால் சுகம் பெற்றிருக்கவேண்டிய ஒரு மனிதன் விட்டுவிடப்படவிருந்தான் **தீமோயுவின் மகனாகிய பர்திமோயு என்கிறவன் வழியருகே உடகார்ந்து பிச்சை கேட்டுக்கொண்டிருந்த குருடனான அவன்** (மாற் 10:46) இயேசுவே தாவீதன் குமாரனே எனக்கு இரங்கும் என்று கூப்பிட்டபோது அநேகர் அவனை அதட்டினார்கள். (மாற் 10:48) எனினும் **இயேசு நின்றார்.** (மாற் 10:49) ஒருவேளை அவன் தவிர்க்கப்பட்டிருப்பானென்றால் இயேசுவை குறித்து அவனது மனதில் குறை உண்டாகியிருக்கும். **தான் இயேசுவால் கண்டுகொள்ளப்பட வில்லையே** என்று கண்ணீர் சொரிந்திருப்பான். ஊருக்கு **உள்ளே வரும்போது நாயனூர் விதவையின் மகனை இயேசு பாடையில் கண்டு உயிரோடு எழுப்பி ஒப்படைத்ததுபோல அங்கு ஊரை விட்டு வெளியே புறப்படும் போதும் குறைவுள்ளவனும் வேண்டிக்கொள்ளுகிறவனுமாகிய ஒரு மனிதனையும் விட்டுவிடாமல் தொட்டுவிட்டு செல்வது இயேசுவின் அற்புதமானதோர் குணமல்லவோ.** விளைவு என்ன ? இயேசுவுக்குப் **பின் சென்றுகொண்டிருந்த கூட்டத்தில்** பார்வையடைந்த அந்த மனிதனும் **பங்கு பெற்றுவிட்டானே.**

சிறு பிள்ளைகளின் மேல் அவர் கைகளை வைக்கும்படிக்கு கொண்டுவந்தபோது சீஷர்கள் அதட்டினார்கள், எனினும் இயேசுவோ சிறுபிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள். அவர்களைத் தடை பண்ணாதிருங்கள். என்றாரே.

கதரேனருடைய நாட்டிற்கு சீஷருடன் இயேசு கரையிலிறங்கினபோது நெடுநாளாய்ப் பிசாசுகள் பிடித்தவனும், வஸ்திரந்தரியாதவனும், வீட்டில் தங்காமல் பிரேத கல்லறைகளில் தங்கி வருவனுமாயிருந்த அந்தப் பட்டணத்து மனுஷன் ஒருவன் அவருக்கு எதிராக வந்தான். அவன் இயேசுவைக் கண்டபோது கூக்குரலிட்டு அவருக்கு முன்பாக விழுந்து இயேசுவே உன்னதமான தேவனுடைய குமாரனே, எனகும் உமக்கும் என்ன ? என்னை வேதனைப் படுத்தாதபடிக்கு உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன் என்று மகா சத்தத்தோட சொன்னான் (லூக்.8:27,28) அந்த அசுத்த ஆவி அவனை விட்டுப்போகும்படி **இயேசு கட்டளையிட்டபடியினாலே** அப்படி சொன்னான். (லூக் 8:29) என்றே வேதத்தில் வாசிக்கின்றோம். ஆனால் இந்த இடத்தில் **லேகியான் பேசுவதற்கு முன்னமே இயேசு அவனிடம் பேசியிருந்தார்** என்பதை வசனம் தெளிவாக சுட்டிக்காட்டுகின்றதே.

பிசாசுகள் அந்த மனிதனை விட்டு நீங்கி பன்றிகளுக்குள் புகுந்து பன்றிக் கூட்டம் முழுவதும் உயர்ந்த மேட்டிலிருந்து கடலிலே பாய்ந்து அமிழ்ந்து மாண்டது. அவைகளை மேய்த்தவர்கள் சம்பவத்ததைக் கண்டு ஓடிப்போய் பட்டணத்திலும் சுற்றுப்புறங்களிலும் அறிவித்தார்கள். (லூக் 8:33,34) **இயேசு செய்த அற்புதம் அறிவிக்கப்பட்டது எனினும், அவரோ** துரத்தப்பட்டுவிட்டார். கதரேனருடைய சுற்றுப்புரத்திலுள்ள திரளான ஜனங்கள் எல்லாரும் மிகவும் பயமடைந்தபடியினாலே **தங்களை விட்டுப்போகும்படி அவரை வேண்டிக் கொண்டார்கள். அந்தபடி அவர் படவில் ஏறி திரும்பிப் போனார்**. (லூக். 8:37)

தற்செயலாக நடைபெற்ற இந்த நிகழ்வினால், ஒரு மனிதன் அடைந்த சுகத்தினால் **விடுதலையினால்** ஊருக்குள் **நுழையும் வாய்ப்பினை இழந்தார் இயேசு. அவர் திரும்பிப்போக வேண்டிய நிலை உண்டானதினால் பிசாசுகள் நீங்கின மனுஷன் அவரோட கூட இருக்கும்படி உத்தரவு கேட்டபோது, இயேசு அவனை நோக்கி, நீ உன் வீட்டுக்கு திரும்பிப்போய் தேவன் உனக்குச் செய்தவைகளையெல்லாம் அறிவி என்று சொல்லி அவனை அனுப்பிவிட்டார்.** அந்தப்படி அவன் போய் இயேசு தனக்குச் செய்தவைகளையெல்லாம் பட்டணத்தில் எங்கும் பிரசித்தப்படுத்தினான் (லூக் 8:28,39) அவனையும் கூட அழைத்து வந்திரப்பாரென்றால் அறிவிக்கிறதற்கு அங்கு யாரும் இல்லாதிருந்திருக்குமே **தான் திரும்ப வேண்டிய நிலை உண்டானதினால் அவனை ஊருக்குள் திருப்பி அனுப்பினார் இயேசு.** தற்செயலாக நடந்த நிகழ்வு ஊருக்குள் நுழைய

முடியாதபடி இயேசுவை வந்த வழியில் திருப்பி அனுப்பிவிட்டது. அந்த மனிதனைக் கண்டுகொள்ளாமல் விடுதலையாக்காமல் இருந்திருந்தால் ஊருக்குள் சென்றிருக்கக்கூடிய வாய்ப்பு இயேசுவிக்குக் கிடைத்திருக்கும். எனினும் அது அவருக்கு இழப்பு அல்ல என்பதை **இயேசுஅந்த ஊருக்கு மறுபடியும் திரும்பி வந்தபோது ஜனங்கலெல்லோரும் அவருக்காகக் காத்ததிருந்தபடியால்** அவரை சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டார்கள் (லூக். 8:40) என்ற நிகழ்வு சுட்டிகாட்டுகின்றதே. இதற்கு காரணம் தற்செயலான அந்த நிகழ்வுதானே அது அவர் வேலையை எளிதாக்கிற்றே.

யூதேயாவை விட்டு இயேசு கலிலேயாவுக்குப் போய்க்கொண்டிருக்கும் பயனத்தின்போது அவர் சமாரியா நாட்டின் வழியாய்ப் போக வேண்டியதாயிருந்தபடியால் வழியில், யாக்கோபு தன் குமாரனாகிய யோசேப்புக்குக் கொடுத்த நிலத்துக்கு அருகே இருந்த சமாரியாவிலுள்ள சகார் என்னப்பட்ட ஊருக்கு வந்தார். (யோவான் 4:2,4,5) இயேசு பிரயாணத்தினால் இளைப்படைந்தவராய் அந்தக் கிணற்றினருகே உட்கார்ந்தார். அப்போழுது ஏறக்குறைய ஆறாம்மணி வேளாயாயிருந்தது. அவருடைய சீஷர்கள் **போஜன பதார்த்தங்கனை கொள்ளும்படி** ஊருக்குளே போயிருந்தார்கள் (யோவா 4:6,7) ஐந்து அப்பத்தையும் இரண்டு மீனையும் கொண்டு ஐயாயரம் பேரை போஷிக்கவும் தண்ணீரை திராட்சை ரசமாக மாற்றவும் வல்லமையுடையவர் அவர். ஐயாயிரம் பேரை போஷிக்கும்படியாக சீஷர்களை அவசரப்படுத்தியவர். **தன்னுடைய பசியின்போதோ காத்திருப்பதை தெரிந்துகொண்டதினால் பயணத்தின்போது உண்டான தாமதத்தத்தில் ஒரு ஸ்திரீ சந்திக்கப்பட்டுவிட்டாளே,** சோதனையின்போது பசியாயிருந்த வேளையிலும் பிசாசின் சத்தத்திற்குச் செவி கொடுக்காதவர் அவர். **அடுத்தவரது வாழ்விற்கு அவசரம் – தனது வாழ்விற்கோ தாமதம். இதுவே இரட்சகரின் வாழ்க்கை சூத்திரம்.**

தண்ணீர் மொள்ள வந்த ஸ்திரீயை நோக்கி **தாகத்துக்குத்தா** என்று பேசத்தொடங்கி தான் யார் என்பதை அவளுக்கு அறிமுகம் செய்துவைத்துவிட்டாரே, **மேசியா வருகிறார்** என்ற அறிவு அவளுக்கு இருந்தபோதிலும் வேசியைப்போலவே வாழ்ந்துகொண்டிருந்த அவள், தன் குடத்தை வைத்துவிட்டு ஊருக்குள்ளேயே போய் ஜனங்களை நோக்கி நான் செய்த எல்லாவற்றையும் ஒரு மனுஷன் எனக்கு சொன்னார். அவரை **வந்து பாருங்கள்.** அவர் கிறிஸ்துதானோ என்றாள் (யோவான் 4:24-29) **தற்செயலாக நடைபெற்ற சந்திப்பினால், தான் இருந்த இடத்திற்கே ஊரை கூடி வரச்செய்துவிட்டாரே இயேசு,** எத்தனை அற்புதமானதோர் காட்சி இது, மேலும் சமாரியர் அவரிடத்தில் வந்து தங்களிடத்தில் தங்க வேண்டுமென்று அவரை வேண்டிக்கொண்டார்கள், அவர்களது வேண்டுதலுக்கு இணங்கி அவர் **இரண்டு நாள் அங்கே தங்கினார்** (யோவா 4:40) அதுபோலவே லாசரு

வியாதியாயிருக்கிறான் என்பதை கேள்வியுற்றபோது பின்னும் இரண்டு நாள் இயேசு > ° þ ª V 1 . ( ¼ B V k V [ 11:6 ) **தேவையுள்ளவர்கள் நெருக்கிக்கொண்டிருந்தபோது தனது வேகத்தினால் அவர்களை இயேசு கடந்துசென்றுவிடவில்லை.**

ஜெப ஆலயத் தலைவனாகிய யாவீரு, மரண அவஸ்தையாயிருந்த தன்னுடைய குமார்த்தியைக் குணப்படுத்த இயேசுவை அழைத்துச்சென்றபோதும், திரளான மக்கள் அவரை நெருங்கினார்கள். பன்னிரண்டு வருஷமாய் பெரும்பாடுள்ளவளாயிருந்த ஸ்திரி சொஸ்தமானாள் அவர் பேசிக்கொண்டிருக்கையில் யாவீரின் குமார்த்தி மரித்துப்போன செய்தி வந்துவிட்டது. எனினும் வழியிலுள்ளோரை இயேசு வீசிவிடவில்லையே.

**பெலிஸ்தர் இஸ்ரவேலின் மேல் யுத்தம்பண்ண** தங்கள் சேனைகளைப் போருக்குக் கூட்டினார்கள். அப்போது ஆகீஸ் தாவீதை நோக்கி நீயும் உன் மனுஷரும் எவ்விதத்திலும் என்னோடே கூட யுத்தத்துக்கு வரவேண்டும் என்று அறியக்கடவாய் என்றான். (1 சாமு 28:1) உம்முடைய அடியான் செய்யப்போகிறதை நீர் நிச்சயமாய் அறிந்துகொள்வீர் என்று தாவீதும் அதற்குச் சம்மதித்திருந்தான் (1 சாமு 28:2) தாவீதும் அவன் மனுஷரும் ஆகிசோடே பின்தண்டிலே போனார்கள் (1 சாமு 29:2) யாதொரு குற்றமும் குறைவும் காணப்படவில்லை (தாணி 6:4) என்று தானியேலைக்குறித்து சொல்லப்பட்டதைப் போலவும், ஒரு குற்றத்தையும் காணேன் (யோவன் 18:38) என்று இயேசுவைக் குறித்து சொல்லப்பட்டதைப் போலவுமே ஒரு குற்றமும் நான் இவனில் கண்டுபிடிக்கவில்லை. (1 சாமு 29:3) என்று தாவீதைக் குறித்தும் சொல்லப்பட்டது என்ற போதிலும் பெலிஸ்தரின் பிரபுக்கள் அவன்மேல் கடுங்கோபமாகி அவனைப்பார்த்து இந்த மனுஷன் நீர் குறித்த தன் இடத்திற்குத் திரும்பிப்போகும்படிக்கு அங்கே அவனை மறுபடியும் அனுப்பிவிடும். யுத்தத்தில் இவன் நமக்குச் சத்துருவாயிராதபடிக்கு இவன் நம்மோடேகூட யுத்தத்திற்கு வரவேண்டியதில்லை, இவன் எதினாலே தன் ஆண்டவனோடே ஒப்புரவானான்? இந்த மனுஷருடைய தலைகளினால் அல்லவா? சவுல் கொன்றது ஆயிரம், தாவீது கொன்றது பதினாயிரம் என்று இந்தத் தாவீதைக் குறித்து அல்லவோ ஆடிப்பாடிச் சொன்னார்கள். (1 சாமு 29:4,5) என்ற சொன்னபோது ஆகீஸ் தாவீதை அழைத்து நீ உத்தமன் என்றும் நீ பாளையத்தில் என்னோடே போக்கும் வரத்துமாயிருக்கிறது என் பார்வைக்கு நல்லது என்றும் கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன், நீ என்னிடத்தில் வந்து சேர்ந்த நாள் முதல் இன்றையவரைக்கும் நான் உன்னில் ஒரு பொல்லாப்பும் காணவில்லை. ஆகிலும் பிரபுக்களின் பார்வைக்கு நீ பிரியமானவன் அல்ல (1 சாமு 29:6) **திரும்பிப்போய்விடு என்று வழியிலேயே தாவீதை திருப்பி அனுப்பிவிட்டான்.**

இஸ்ரவேல் மக்களை என் ஆண்டவனுடைய (ஆகீஸ்) சத்துருக்கள் என்று தாவீது கூறுவதும் நீ தேவனுடைய தூதனைப்போல என் பார்வைக்குப் பிரியமானவன் (1 சாமு 29:8,9) என்று ஆகீஸ் கூறுவதும் ஆச்சரிமானது. யுத்தத்திற்கச் சென்ற தாவீது பெலிஸ்தரின் தேசத்திற்குத் திரும்பினான். தாவீதும் அவன் மனுஷரும் மூன்றாம் நாளிலே சில்லாகுக்கு வந்த சேருகிறதிற்குள்ளே அமலேக்கியர் தென்புறத்துச் சீமையின்மேலும் சில்லாக்கின் மேலும் விழுந்து சில்லாகைக் கொள்ளையடித்து அதை அக்கினியால் சுட்டெரித்து அதிலிருந்த ஸ்திரீகளாகிய சிறியவர்களையும் பெரியவர்களையும் சிறைப்பிடித்து ஒருவரையும் கொன்றுபோடாமல் அவர்களைப் பிடித்துக்கொண்டு தங்கள் வழியே போய் விட்டார்கள் (1 சாமு 30:1,2) **இஸ்ரவேலை எதிர்த்த பெலிஸ்தியருடன் சென்றான் தாவீது, ஆனால் இங்கோ குடும்பமே பறிபோய்விட்டது.** சவுல் தாவீதைத் தேடியபோது பெலிஸ்தியர்கள் சவுலுக்கு எதிராக வந்ததைப் போல தாவீது இஸ்ரவேலை எதிர்த்து பெலிஸ்தியருடன் சென்றபோது அமலேக்கியர் தாவீதின் மீது வந்துவிட்டார்கள். பட்டணம் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டது. மனைவிகளும், குமாரரும் குமார்த்திகளும் சிறைப்பிடித்துக் கொண்டுபோகப்பட்டார்கள். தாவீதின் இரண்டு மனைவிகளாகிய அகினோவாமும் அபிகாயிலும் சிறைப்படித்துக்கொண்டு போகமாட்டார்கள். பெலிஸ்தியரோடு கூட இஸ்ரவேலரை எதிர்த்து சென்றதால் வீடே கொள்ளையாயிற்று. **தாவீது வழியிலேயே திருப்பி அனுப்பப்பட்டது. குடும்பத்தினைப் பாதுகாப்பதற்காகவே நமக்கும் இப்படிப்பட்ட நிலை உண்டாகுமென்றால் அதனைப் புரிந்துகொள்ள வேண்டும்.**

தாவீது கர்த்தரை நோக்கி நான் அந்தத் தண்டைப் பின்தொடரவேண்டுமா? அதைப் பிடிப்பேனா என்று கேட்டபோது. அதைப் பின்தொடர் அதை நீ பிடித்து சகலத்தையும் திருப்பிக்கொள்வாய் என்றார் கர்த்தர். (1 சாமு 30:8) தாவீது பின்தொடர்ந்து சென்றபோது **ஒரு எகிப்தியனை வெளியில் அவர்கள் கண்டு.** அவனைத் தாவீதினிடத்தில் கொண்டுவந்து புசிக்க அவனுக்கு அப்பமும் குடிக்க தண்ணீரும் கொடுத்து அத்திப்பழ அடையின் ஒரு துண்டையும் வற்றலான இரண்டு திராட்சை பழ குலைகளையும் அவனுக்குக் கொடுத்தார்கள். அதை அவன் சாப்பிட்ட பின்பு **அவனுடைய உயிர் திரும்ப அவனுக்குள் வந்தது** அவன் இராப்பகல் மூன்று நாளாய் அப்பம் சாப்பிடமாலும் தண்ணீர் குடியாமலும் இருந்தான். (1சாமு30:11,12) அவன் சிக்லாகை அக்கினியால் சுட்டெரித்துப் போட்டவர்களுக்குள் ஒருவன் (1 சாமு 30:14) **வழியில் விடப்பட்ட தாவீது எகிப்தியனைக் கண்டுக்கொண்டதினாலேயே** வெற்றி தாவீது வசமானது (1 சாமு 30:18,19) உன் சத்துரு பசியாயிருந்தால் அவனுக்கு புசிக்க ஆகாரங்கொடு அவன் தாகமாயிருந்தால் குடிக்கத் தண்ணீர்கொடு (நீதி 25:21) என் வசனத்தினால் வெற்றியை வசப்படுத்திக்கொண்டான். **மனைவி மற்றும் பிள்ளைகளைக் காப்பாற்றி போகிற வேகத்தில் வழியில் கிடந்த மனிதனைக் கண்டுகொள்ளாமல்**

**சென்றிருந்தால் வழிதெரியாமல் தாவீது நின்றிருப்பானே!** உன் மாம்சமானவனுக்கு உன்னை ஒளிக்காமலிருக்கிறது அல்லவே உகந்த உபவாசம் (ஏசா 58:6,7) ஒருவர் பாரத்தை ஒருவர் சுமக்கும் அனுபவம் இதுவே.

பிரியமானவர்களே, எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் மக்களை நாம் ஏமாற்றிவிடக்கூடாது அவர்களைக் கண்டும் அவர்களை விட்டு கடந்து சென்று விடக்கூடாது. **சிந்துகிற துணிக்கைகளுக்காகவும் (மாற் 7:28) மேஜையிலிருந்த விழும் துணிக்கைகளுக்காகவும்** வழியிலும் வாசலிலும் காத்திருக்கும் ஜனங்களுக்கு பகிர்ந்துகொடுப்பதும் கிறிஸ்துவின் அன்பினை பகிர்ந்துகொள்ளுவதும் நம்மிடத்தில் விடப்பட்டுள்ள மாபெரும் பணி. எந்த அளவினால் அளக்கிறோமோ அந்த அளவினாலேயே திரும்பி அளக்கப்படுவோம். (லூக் 6:38)


**அறிவிப்பு !** **அறிவிப்பு !!**

# அவசர தேவை

**TRIBAL MISSION டிரைபல் மிஷன்** (ஆனைக்கட்டி) & (வயநாடு)

ஆகிய இரண்டு ஆதிவாசிகளுக்கான ஆஸ்பத்திரிகளுக்கு

**Doctors டாக்டர் - Nurses செவலியர்** (நர்ஸ்)

**ANM உதவியாளர்கள்** தேவை

| | |
|---|---|
| இரண்டு **M.B.B.S.** டாக்டர்கள் | அவசரமாக தேவை |
| இரண்டு **Nurse** செவிலியர்கள் | |

தகுதிக்கேற்ற சம்பளம் கொடுக்கப்படும்

தங்குவதற்கான வீடு வசதி உண்டு (வாடகை இல்லை)

***ஆதிவாசிகளுக்கு சேவை செய்யும் மனப்பான்மையுடனும் சுவிசேஷம் அறிக்கவும் பாரமுள்ளவர்களாக இருப்பவர்களுக்கு இது நல்ல வாய்ப்பு***

ஓய்வு பெற்றவர்களானாலும் விண்ணப்பிக்கலாம்

*தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :*

**Dr. MURALIDAR,** M.D., M.N. M.A.S.

***Medical Superintendant***

**Bethani Medical Centre, ANAIKATTI. P.O. 641108 Coimbatore**

Mob.: **09443165080** email : muralidar.anaikatty @gmail.com

## கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்



Rt. Rev. Dr. P.G. Kuruvilla

வடக்கு கேரளா CSI டையோசிஸ் முன்னாள் பிஷப் Rt.Rev. Dr. P.G. Kuruvilla அவர்கள் 2020 டிசம்பர் மாதம் 16ம் தேதி தனது 88ம் வயதில் மரித்துப்போனார். 17ம் தேதி அடக்க ஆராதனை நடந்தது. மலபார் டையோசிஸ் பிஷப் அவர்கள் தலைமையில் ஆராதனை நடத்தப்பட்டது. கொச்சின் டையோசிஸ் Rt. Rev. Fenn அவர்கள் கர்த்தரின் செய்தியை வழங்கினார்.

வடக்கு கேரளா டையோசிஸ் தொடங்கிய ஆரம்ப காலத்தில் இரண்டு வெள்ளைக்கார பிஷப்மார் டையேசிஸ்சை நடத்தினார்கள். அதன்பின் இரண்டு மலையாள பிஷப்மார் டையோசிஸ்சை நடத்தினார்கள். Rt. Rev. Dr. Kuruvilla அவர்கள் 5வது பிஷப்பாக பொருப்பெடுத்தார்.

பிஷப் Kuruvilla அவர்களுக்கு என்மேல் தனி அன்பும், மரியாதையும் உண்டு. திருவனந்தபுரம் கண்ணமூலா செமினரியில் ஆசிரியராக பணியாற்றும்போதே South Kerala Diocese CSI சபைகளில் என கன்வென்ஷன் நடந்தபோது சில கன்வென்ஷனில் அவர் எனக்காக கலந்தகொண்டார். நான் கோழிக்கோடு கத்தீட்ரல் CSI சபையில் உபவாச கூட்டம் நடத்தியபோது அந்த முழு நாளும் கூட்டத்தில் கலந்துகொண்டார். கூட்டத்துக்கு தலைமை தாங்கினார். அடக்க ஆராதனையில் பேசிய எல்லா ஆயர்களும் அழுதுகொண்டு அவர் ஊழியத்தை புகழ்ந்து பேசிய போது அச்சன்மார்களை அவர் எவ்வளவு நேசித்தார் என்பதையும். அவர் எவ்வளவு உதவிகள் செய்தார் என்தையும் உணர முடிந்தது. டையோசிஸ்ஸில் உள்ள பல CSI சபைகளிலிருந்து வந்தவர்கள் அழுதது டையோசிஸ்ஸில் உள்ள அனைவராலும் நேசிக்கப்பட்டவர் என்பதை அறியமுடிந்தது.

ஜாமக்காரனின் ஆவிக்குரிய நண்பர் என்ற நிலையில் அவரின் சிறந்த ஊழியத்துக்காக, சாட்சியுள்ள ஜீவியத்துக்காக பிஷப் என்றபதவி பெருமை இல்லாத தாழ்மையுள்ள பிஷப் அவர்களின் வாழ்கைக்காக தெய்வத்தை துதிக்கிறேன். கர்த்தர் தாமே பிஷப்பின் குடும்பத்துக்கும் டையோசிஸ் மக்களுக்கும் ஆறுதல் தருவாராக.

---

**DECEMBER-2020**

# Printed Book (Periodical)

**RNI Reg. No. TNBIL/2016/70171**

**Annual Subscription:**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.